Regional Bulletin / Puducherry / Tamil /18.10/ 19.03.2024 / Script

வணக்கம்

ஆல் இண்டியா ரேடியோ, புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவண குமார்

நாள் 19.03.2024 செவ்வாய்க்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

**தலைப்புச் செய்திகள்**

தமிழ்நாடு-புதுச்சேரி உட்பட, 17 மாநிலங்கள் மற்றும் 4 யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 102 தொகுதிகளில், முதல் கட்ட மக்களவை தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நாளை தொடங்க உள்ளது.

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று பாலக்காடு மற்றும் சேலத்தில், தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்.

காங்கிரஸ் காரிய கமிட்டி இன்று புதுடெல்லியில் கூடி, மக்களவை தேர்தலுக்கான கட்சியின் தேர்தல் அறிக்கை குறித்து விவாதித்தது.

தெலங்கானா ஆளுநர் மற்றும் புதுச்சேரி துணைநிலை ஆளுநர் பொறுப்புகள், ஜார்க்கண்ட் ஆளுநர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணனிடம், கூடுதல் பொறுப்புகளாக ஒப்படைக்கப் பட்டுள்ளன.

தேர்தல் அறிவிக்கை (17 )

தமிழ்நாடு-புதுச்சேரி உட்பட, 17 மாநிலங்கள் மற்றும் 4 யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 102 தொகுதிகளில் ஏப்ரல் 19ஆம் தேதி நடைபெறவுள்ள முதல் கட்ட மக்களவை தேர்தலுக்கான தேர்தல் அறிவிக்கை நாளை வெளியிடப்பட்டு, வேட்புமனு தாக்கல் தொடங்க உள்ளது. வேட்புமனுக்களை தாக்கல் செய்ய, வரும் 27ஆம் தேதி கடைசி நாளாக இருக்கும். மறுநாள் 28ஆம் தேதி வேட்புமனு பரிசீலனை நடைபெறும். ஏற்கப்பட்ட வேட்பு மனுக்களை விலக்கிக்கொள்ள, வரும் 30ஆம் தேதி கடைசி நாள் ஆகும். இந்த முதல் கட்ட மக்களவை தேர்தலில், தமிழகத்தில் 39 தொகுதிகளுக்கும், ராஜஸ்தானில் 12, உத்தரபிரதேசத்தில் 8, மத்திய பிரதேசத்தில் 6, உத்தராகண்ட், மகாராஷ்டிரா மற்றும் அஸ்ஸாமில் தலா 5, பீகாரில் 4, மேற்கு வங்கத்தில் 3, அருணாசல பிரதேசம் மணிப்பூர், மற்றும் மேகாலயாவில் தலா 2, சத்தீஸ்கர், மிசோரம், நாகாலாந்து, சிக்கிம், திரிபுரா, அந்தமான்-நிக்கோபார், ஜம்மு-காஷ்மீர், லட்சத்தீவுகள், மற்றும், புதுச்சேரியில் தலா ஒரு தொகுதியிலும் வாக்குப்பதிவு நடைபெறும். ஏப்ரல் 19ஆம் தேதி மக்களவை தேர்தலில் பதிவாகும் வாக்குகள் ஜூன் 4ஆம் தேதி எண்ணப்படும்.

மோடி -1 (15)

வரவிருக்கும் மக்களவை தேர்தலை ஒட்டி நாடுமுழுவதும் அரசியல் செயல்பாடுகளும், தேர்தலுக்கான ஏற்பாடுகளும் தீவிரமடைந்து வருகின்றன. அரசியல் கட்சிகளின் தேர்தல் பிரச்சாரமும் தொடங்கியுள்து. பிரதமரும் மூத்த பிஜேபி தலைவருமான திரு. நரேந்திரமோடி இன்று சேலத்தில் பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றினார். தமிழகத்தின் வளர்ச்சியே தங்களின் இலக்கு என்று அவர் கூறினார். பெண்கள் சக்தியே, மோடியின் பாதுகாப்புக் கவசம் என்றும், அடுத்த 5 ஆண்டுகளில் நலத் திட்டங்கள் இன்னும் வேகமாக பெண்களுக்கு வந்து சேரும் என்றும் அவர் தெரிவித்தார். தமிழகத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மலிந்து விட்டதாகவும், இண்டி கூட்டணியினர், பெண்களை எப்படி நடத்துகிறார்கள் என்பதற்கு தமிழகமே சாட்சி என்றும் அவர் குறிப்பிட்டார்.

பா.ம.க. உடனான கூட்டணியால் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு புதிய சக்தி கிடைத்து இருப்பதாகவும் பிரதமர் கூறினார். தமிழ்நாடு பிஜேபி தலைவர் திரு. அண்ணாமலை, பாமக நிறுவனர் டாக்டர் ராமதாஸ் உள்ளிட்டோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். இவ்விரு தலைவர்களும் முன்னதாக, தைலாபுரத்தில், கூட்டணி உடன்பாட்டில் கையெழுத்திட்டனர். இதன்படி தேசிய ஜனநாயக கூட்டணியில் பாமக, 10 மக்களவை தொகுதிகளில் போட்டியிட உள்ளது.

மோடி -2 (6)

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று சேலம் கூட்டத்திற்கு முன்பாக, கேரள மாநிலம் பாலக்காட்டில், தேசிய ஜனநாயக கூட்டணியின் தேர்தல் பிரச்சாரத்தின் ஓர் அங்கமாக நடைபெற்ற சாலை பவனியில் கலந்து கொண்டார். மாநில பிஜேபி தலைவர் திரு. சுரேந்திரன், மற்றும், பாலக்காடு-பொன்னானி மக்களவை தொகுதிகளுக்கான தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களும், சாலை பவனியில் பங்கேற்றனர்.

பசுபதி (13)

மகாராஷ்ட்ர நவநிர்மாண் சேனா தலைவர் திரு.ராஜ்தாக்கரே இன்று புதுடெல்லியில் மூத்த பிஜேபி தலைவரும், மத்திய அமைச்சருமான திரு. அமித்ஷா, பிஜேபி பொதுச் செயலர் திரு.வினோத் தாவ்டே ஆகியோரைச் சந்தித்துப் பேசியுள்ளார். மகாராஷ்ட்ர நவநிர்மாண் சேனா, தேசிய ஜனநாயக கூட்டணியில் சேரக்கூடும் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது.

இதற்கிடையே மத்திய அமைச்சரும், ராஷ்ட்ரிய லோக் ஜனசக்தி கட்சியின் தலைவருமான திரு. பசுபதி குமார் பரஸ், மத்திய அமைச்சரவையில் இருந்து ராஜிநாமா செய்துள்ளார். பீகாரில் தேசிய ஜனநாயக கூட்டணி அறிவித்துள்ள தொகுதி உடன்பாட்டில் RLJ கட்சிக்கு எந்த தொகுதியும் ஒதுக்கப்படாத நிலையில், அமைச்சரின் ராஜிநாமா அறிவிப்பு வெளியாகியுள்ளது. தமது கட்சிக்கு அநீதி இழைக்கப் பட்டுள்ளதாக, திரு.பரஸ் இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார்.

## காங்கிரஸ் கூட்டம் (16)

காங்கிரஸ் காரிய கமிட்டி இன்று புதுடெல்லியில் கூடி, மக்களவை தேர்தலுக்கான கட்சியின் தேர்தல் அறிக்கையை விவாதித்தது. கட்சித் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, முன்னாள் தலைவர்கள் திருமதி சோனியா காந்தி-ராகுல் காந்தி, மற்றும், திருமதி பிரியங்கா காந்தி, திரு. ப.சிதம்பரம், திரு. திக்விஜய் சிங், திரு. அஜய் மாக்கன், திரு. கே.சி. வேணுகோபால் உள்ளிட்ட மூத்த தலைவர்களும், இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். பின்னர் திரு, வேணுகோபால் செய்தியாளர்களிடம் பேசுகையில் காங்கிரஸ் தேர்தல் அறிக்கையை இறுதி செய்யும் அதிகாரத்தை, காரியக் கமிட்டி, கட்சித் தலைவருக்கு வழங்கி இருப்பதாக தெரிவித்தார். காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கை, நம்பிக்கை மற்றும் உறுதிப்பாட்டின் ஆவணமாக திகழும் என்று, கட்சித் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே முன்னதாக சமூக ஊடகப் பதிவு ஒன்றில் கூறினார். நாடு மாற்றம் ஒன்றைக் கோருவதாகவும், அவர் தெரிவித்தார்.

மக்களவை தேர்தலுக்கான காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் பட்டியலை இறுதி செய்வதற்கான, கட்சியின் மத்திய தேர்தல் குழுக் கூட்டமும், இன்று மாலை நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிஜேபி -கெஜ்ரிவால் (14)

டெல்லி அரசின் கலால் கொள்கை பற்றிய வழக்கில் டெல்லி முதலமைச்சரும், ஆம் ஆத்மி கட்சியின் அமைப்பாளருமான திரு. அரவிந்த் கெஜ்ரிவால், அமலாக்கப் பிரிவின் சம்மன்களை தொடர்ச்சியான முறையில் தவிர்த்து வருவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது. இதையே இவ்வழக்கில் திரு. கெஜ்ரிவாலுக்கு எதிரான ஆதாரமாக கருத முடியும் என்று பிஜேபி செய்தி தொடர்பாளர் திரு. சம்பீத் பாத்ரா இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். டெல்லி உயர் நீதிமன்றம் அண்மையில் வெளியிட்ட தீர்ப்பின்படி, திரு. கெஜ்ரிவாலுக்கு எதிரான சம்மன்கள் சட்டப்பூர்வ நடவடிக்கை தான் என்றும், அவர் தெரிவித்தார். இதற்கிடையே மூத்த ஆம் ஆத்மி தலைவர் திருமதி ஆதிஷி சிங் இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில், அமலாக்கத் துறையை மத்திய அரசு அரசியல் ஆயுதமாகவே பயன்படுத்தி வருவதாக குற்றம் சாட்டினார்.

## ஆளுநர் பொறுப்பு (6)

தெலங்கானா ஆளுநர் மற்றும் புதுச்சேரி துணைநிலை ஆளுநர் பதவியில் இருந்து டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன், ராஜிநாமா செய்ததை தொடர்ந்து, இவ்விரு பொறுப்புகளும், ஜார்க்கண்ட் ஆளுநர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணனிடம், கூடுதல் பொறுப்புகளாக ஒப்படைக்கப் பட்டுள்ளன. டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன், தமிழகத்தில் இருந்து மக்களவை தேர்தலில் போட்டியிடலாம் என்றும் கூறப்படுகிறது.

## புதுச்சேரி சீல் (7)

புதுச்சேரியில் தேர்தலுக்கான நடத்தை நெறிமுறைகள் அமலில் உள்ளதைக் கருத்தில் கொண்டு அமைச்சர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் சிலர், அரசால் தங்களுக்கு வழங்கப்பட்ட வாகனங்கள் மற்றும் அலுவலகங்களை அரசிடம் திருப்பி ஒப்படைத்துள்ள நிலையில், சட்டமன்ற வளாகம் அல்லாது அந்தந்த தொகுதிகளில் செயல்பட்டு வந்த சட்டமன்ற உறுப்பினர் அலுவலகங்களையும் இன்று தேர்தல் அதிகாரிகள் பூட்டி, சீல் வைத்துள்ளனர்.

***வாக்குச்சாவடி (7)***

புதுச்சேரி பிராந்தியத்தில் உள்ள 733 வாக்குச் சாவடிகளில், பதற்றமான வாக்குச் சாவடிகளை முன்கூட்டியே கண்டறிந்து, உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுப்பது குறித்து, மாவட்ட ஆட்சியர் திரு.குலோத்துங்கன் இன்று, உதவி தேர்தல் நடத்தும் அதிகாரிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். மாதிரி வாக்குச் சாவடி, மகளிர் வாக்குச் சாவடி, இளையோர் வாக்குச் சாவடி மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான வாக்குச் சாவடி அமைப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

தேர்தல் எந்திரம் (10)

புதுச்சேரியில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தேர்தல் ஆணையத்தின் மென்பொருள் மூலம் இன்று நடைபெற்ற, மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களுக்கான முதலாவது தற்செயல் கலப்பு நடைமுறைகளில், மாவட்டத்தின் 25 சட்டமன்ற தொகுதிகளில் மக்களவை தேர்தலின்போது பயன்படுத்துவதற்கான 965 மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களும், விவி-பாட் காகிதத் தணிக்கை இயந்திரங்களும், சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டன. மாவட்ட உதவி ஆட்சியர் திரு. யஷ்வந்த் மீனா, மாவட்ட துணைத் தேர்தல் அதிகாரி திரு. வினய ராஜ், நோடல் அதிகாரி திரு சிவசங்கரன், மற்றும் தேர்தல் அதிகாரிகளும், பல்வேறு தேசிய மற்றும் மாநில கட்சிகளின் பிரதிநிதிகளும் இதில் கலந்து கொண்டனர்.

தபால் வாக்கு (9)

அரசு ஊழியர்கள் பிற மாநிலங்களில் உள்ள நாடாளுமன்ற தொகுதிகளில் தேர்தல் பணியில் ஈடுபட்டால், தபால் மூலம் வாக்களிக்கலாம் என்றும், புதுச்சேரியைச் சேர்ந்த இத்தகைய வாக்காளர்கள், உதவி தேர்தல் அதிகாரியிடம் விண்ணப்பித்து அஞ்சல் வாக்குச் சீட்டை தபால் மூலம் பெற்றுக்கொள்ளலாம் என்றும், மாவட்ட தேர்தல் அதிகாரி அறிவித்துள்ளார். இதற்கான 12ஆம் எண் விண்ணப்ப படிவத்தை, மாவட்ட தேர்தல் அதிகாரியின் இணைய தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தேர்தல் பணி சான்றிதழ்  (10)

வாக்குப்பதிவு நாள் அன்று தேர்தல் பணியில் ஈடுபடும் அரசு ஊழியர்கள், காவலர்கள் மற்றும் இதர அத்தியாவசிய சேவைப் பணியாளர்கள், தேர்தல் பணி சான்றிதழ் பெற்றுக் கொண்டு, தங்களுக்குப் பணி ஒதுக்கப்பட்டுள்ள வாக்குச் சாவடியிலோ அல்லது அருகில் உள்ள வாக்குச் சாவடியிலோ வாக்களிக்கும் வசதியை தேர்தல் ஆணையம் வழங்குகிறது. காவலர்கள், தேர்தல் பணி சான்றிதழ் பெறுவதற்கான 12 ஏ விண்ணப்ப படிவத்தை காவல் துறை கண்காணிப்பாளர் விநியோகிப்பார் என்றும், அரசு ஊழியர்கள் மற்றும் அரசு சாரா ஊழியர்களுக்கு, 2ஆவது தேர்தல் பயிற்சி அமர்வின்போது, இப்படிவங்கள் வழங்கப்படும் என்றும் மாவட்ட தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

**குலோத்துங்கன் காணொளி (6)**

முறையான வாக்காளர் கல்வி மற்றும் தேர்தல் பங்கேற்புக்கான, தேர்தல் ஆணையத்தின் ஸ்வீப் திட்டத்தின் கீழ், வாக்காளர் விழிப்புணர்வு நோக்கத்திலான பிரத்யேக காணொளியை இன்று மாலை புதுச்சேரியில், மாவட்ட தேர்தல் அதிகாரி திரு.குலோத்துங்கன் வெளியிடுகிறார். கடற்கரை சாலை, லே-கபே உணவகம் அருகே டிஜிட்டல் திரையில் இக்காணொளி வெளியிடப்படும்.

## மனிதக் கடத்தல் (12)

மனிதக் கடத்தலை தடுப்பது குறித்து தேசிய மகளிர் ஆணையம், ரயில்வே பாதுகாப்பு படையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இது தொடர்பாக இன்று புதுடெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தேசிய மகளிர் ஆணையத்தின் தலைவர் திருமதி ரேகா ஷர்மா பேசுகையில், 70 சதவிகித மனிதக் கடத்தல் குற்றங்கள், பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளுடன் தொடர்புள்ளவை என்றும், இத்தகைய குற்றங்களைத் தடுப்பதில் ரயில்வே பாதுகாப்பு படையினர் முக்கியப் பங்கு வகிப்பதாகவும் கூறினார். ரயில்வே கட்டமைப்பை பயன்படுத்தி, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராக குற்றம் இழைக்கப்படுவதை ரயில்வே பாதுகாப்பு படை அனுமதிக்காது என்று ஆர்.பி.எஃப் தலைமை இயக்குநர் திரு. மனோஜ் யாதவா தெரிவித்தார்.

விமானப்படை (8)

போர் விமானங்கள் மற்றும் பாதுகாப்புத் தேவைகளுக்கான போக்குவரத்து விமானங்களை, அவசர காலத்தில் தேசிய நெடுஞ்சாலையிலேயே தரையிறக்கும் நடைமுறைகளை, ஆந்திர மாநிலம் பாபட்லா அருகே அட்டங்கியில், இந்திய விமானப் படை வெற்றிகரமாக செய்து பார்த்துள்ளது. இந்திய விமானப் படையின் ஒருங்கிணைப்புடன், தீபகற்ப இந்தியாவில், தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையத்தால் கட்டடப்பபட்டுள்ள முதலாவது அவசரகால இறங்கு தளமாக அட்டங்கி இறங்கு தளம் திகழ்வதும் குறிப்பிடத்தக்கது.

சந்து (7)

மக்களவை தேர்தலுக்கு சில நாட்கள் மட்டுமே உள்ள நிலையில், அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கான முன்னாள் இந்திய தூதர் திரு. தரண்ஜித் சிங் சந்து இன்று பாரதீய ஜனதா கட்சியில் சேர்ந்துள்ளார். புதுடெல்லியில் பிஜேபி பொதுச் செயலர்கள் திரு. வினோத் தாவ்டே-திரு.தருண் சூக் ஆகியோர் முன்னிலையில் அவர் அக்கட்சியில் இணைந்தார். திரு. சந்து, பஞ்சாபில் இருந்து மக்களவை தேர்தலில் போட்டியிடக்கூடும் என்றும் தகவல் வெளியாகி உள்ளது.

பல்கேரியா (9)

கடல் கொள்ளையர்களால் கடத்தப்பட்ட, பல்கேரிய கப்பல் எம்.வி. ரோயன்-ஐ பாதுகாப்பாக மீட்டெடுத்த இந்திய கப்பல் படைக்கு பல்கேரிய நாட்டு அதிபர் திரு. ருமன் ராதேவ் நன்றி தெரிவித்துள்ளார். இதற்கு பதிலளித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி, எக்ஸ் வலைதளப்பதிவில் வெளியிட்டுள்ள செய்தியில், 7 பல்கேரிய நாட்டினர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளது, மகிழ்ச்சி அளிப்பதாகவும், இந்திய பெருங்கடல் பகுதியில் கடற்கொள்ளை மற்றும் பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்தி, பாதுகாப்பான கடல் பயணங்களை இந்தியா உறுதிசெய்யும் என்றும் கூறியுள்ளார்.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

தமிழ்நாடு-புதுச்சேரி உட்பட, 17 மாநிலங்கள் மற்றும் 4 யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 102 தொகுதிகளில், முதல் கட்ட மக்களவை தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நாளை தொடங்க உள்ளது.

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று பாலக்காடு மற்றும் சேலத்தில், தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்.

காங்கிரஸ் காரிய கமிட்டி இன்று புதுடெல்லியில் கூடி, மக்களவை தேர்தலுக்கான கட்சியின் தேர்தல் அறிக்கை குறித்து விவாதித்தது.

தெலங்கானா ஆளுநர் மற்றும் புதுச்சேரி துணைநிலை ஆளுநர் பொறுப்புகள், ஜார்க்கண்ட் ஆளுநர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணனிடம், கூடுதல் பொறுப்புகளாக ஒப்படைக்கப் பட்டுள்ளன.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RSS/MS/VM